# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI

## O.S. No. 158/2021

**DW.2** is solemnly affirmed on **19.02.2026** in accordance with the provisions of the 1969.

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சேகர் | Father Name | |
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**முதல் விசாரணை :**

நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டது தான், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படுவது நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து எழுதிக்கொண்ட கிரய உடன்படிக்கை ஆவணம் தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.11 ஆக குறியிடப்படுகிறது. தற்போது ஜெயகுமார் பெயரில் ஏற்பட்ட பட்டா தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.12 ஆக குறியிடப்படுகிறது. ஜெயகுமார் பெயரில் ஏற்பட்ட அ பதிவேடு தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.13 ஆக குறியிடப்படுகிறது. நான், ஜெயகுமாருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.14 ஆக குறியிடப்படுகிறது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.15 ஆக குறியிடப்படுகிறது. நான் கிருஷ்ணகிரி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிராதின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.16 ஆக குறியிடப்படுகிறது. அந்த

வழக்கிற்கு ஜெயகுமார் போட்ட பதிலுரை தாக்கல் செய்கிறேன், அது பி.வா.சா.ஆ.17 ஆக குறியிடப்படுகிறது. **வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கின்றார், ஆட்சேபனையுடன் ஆவணங்கள் குறியிடப்படுகிறது.**

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R

Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.